திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கழிப்பிடங்களுக்குத் தாய்மார்கள் செல்கிற போது குழந்தைகளை அந்நியர்களிடத்தில் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படி அவர்கள் செல்கிற போது குழந்தைகளைக் கொடுத்து விட்டுச் செல்வதற்கு என்று ஆஸ்பிடல்களில் தனியாக செவிலியர்களை நியமிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த முறை அமலில் இருக்கிறது. கழிப்பிடங்களுக்குச் செல்கிற நேரத்தில் குழந்தைகளைப் பாதுகாக்க செவிலியர்கள் இருக்கிறார்கள், இப்போது நடந்து இருக்கின்ற சம்பவம் எல்லாம், தன்னுடைய கணவனும், அந்தத் தாய்மாரின் கணவரும் நண்பர்கள், குழந்தையைக் காட்ட வேண்டும் என்று சொல்லி, ஏமாற்றி வாங்கிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை வேறு. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பிரச்னை இதில் எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இதே மாதிரியான திருட்டுக்கள் மேலும் நடை பெறாமல் இருக்க, தகுந்த பாதுகாப்பிற்காக, 'வாச் அன்ட் வார்டு' அதிகாரிகளை அதிகமாக நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அது ஒரு கொள்கைப் பிரச்னை. கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்சனைகளுக்கு பதில் அளிக்கக் கூடாது என்று விதி இருக்கிறது.

3. அறிவிப்பு.

வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டுவணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.